திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, ஆண்டுக்கு ஆண்டு இந்தத் தொழிலகத்தில் சைக்கிள் விற்பனை குறைந்து கொண்டே வருவதற்கான காரணம் என்ன ? 1969-ஆம் ஆண்டில் ஒரு சைக்கிள் இணைப்பு கூட நடைபெறவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் அந்தத் தொழிலகத்தில் இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்றாவது சொல்ல முடியுமா ? ஒரு சைக்கிள் கூட அங்கே இணைக்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இந்தத் தொழிற்சாலை சைக்கிள் உற்பத்தித் தொழிற்சாலை அன்று என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன். இது 'அசெம்பிளி' செய்கிற ஒரு தொழிற்சாலை. இந்தத் தொழிற்சாலையில் முதலில் கிட்டத்தட்ட 600-ல் ஆரம்பித்து 1,000, 1,500 என்று பெருகி, பிறகு அது குறைந்து வந்திருக்கிறது. இப்போது இந்தத் தொழிற்சாலை நல்ல முறையில் நடைபெறுகிறதா என்று புனராலோசனை செய்ய வேண்டும் என்று அரசு முடிவுக்கு வந்திருக்கிறது. அந்த நிலைமையின் காரணமாக அங்கே உற்பத்தி செய்யவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : இது இணைப்பு செய்யும் தொழிற்சாலை தான் என்றாலும், அது முதலில் 1,600, 1,700 என்ற அளவுக்கு உயர்ந்து பிறகு குறைந்து போயிருக்கிறது. இப்போது ஒரு சைக்கிள் கூட இணைப்பு செய்யப்படவில்லை என்று தெரிகிறது. மற்ற சைக்கிள்களின் விற்பனை எண்ணிக்கை உயர்ந்து வரும்போது அரசாங்கத்தால் தயாரிக்கப்படும் சைக்கிள் ஒன்றுகூட விற்காமல் இருப்பதற்கான காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அரசாங்கத்தில் தயாரிக்கப்படும் சைக்கிளுக்கு அவ்வளவு மதிப்பு இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒப்புக் கொண்டதற்கு நன்றி. ஆனால் அரசாங்கத் தொழிலகத்தில் இணைக்கப்படுகிற சைக்கிளுக்கு அதிக வாய்ப்பில்லை என்றுதான் நான் எண்ணுகிறேன். ஆகவே இதுபற்றிப் புனராலோசனை செய்துகொண்டிருக்கிறோம்.

### *State Transport Buses*

***35. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :**

**(*a*) whether buses run by the Tamil Nadu State Transport Department are covered by permits under the Madras Motor Vehicles Rules, 1940 ;**

**(*b*) whether there is any condition in the permit about the number of passengers to be carried ;**

**(*c*) whether it is being followed in Madras City ; and**

**(*d*) if not, the reasons therefor ?**

2nd December 1970]

## அரசு போக்குவரத்துத் துறை பேருந்துக்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துத் துறையினல் நடத்தப் படும் பேருந்துக்கள், தமிழ் நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிச் சீட்டுகளைப் பெற்று நடத்தப்படுகின்றனவா ?

(இ) ஏற்றிச் செல்லப்படும் பயணிகளின் எண்ணிக்கை குறித்து அனுமதிச் சீட்டில் நிபந்தனை ஏதேனும் உள்ளதா ?

(உ) சென்னை மாநகரில் இந்த நிபந்தனைகள் பின்பற்றப்படுகின் றனவா ?

(எ) இல்லையெனில் அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: (அ)வும் (இ)யும் : ஆம்.

(உ) வும் (எ) யும் : சென்னை மாநகரில் ஓடும் மாடிப் பேருந்து, இணைப்புப் பேருந்துகள் தவிர, நெரிசல் நேரங்களில் துறையின் மற்றப் பேருந்துகளில் பயணிகளின் அதிக எண்ணிக்கை சில வேளைகளில் தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. ஏனெனில், இந்நகர மக்களின் போக்குவரத்து முக்கியமாகப் பேருந்துகளின் மூலம் நடைபெறுவதால் தான்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மோட்டார் வண்டிகளுக்காக என்று ஒரு விதி இருக்கிறது. அந்த விதிக்கு ஒப்ப தனியார் பேருந்துகளானாலும் சரி, அரசுப் பேருந்துகளானாலும் சரி, எல்லாவற்றிற்கும் ஒரே மாதிரி யான லைசென்ஸ்தான் தரப்படுகிறது. அந்த அனுமதிப் பிரகாரம் ஒரு பேருந்தில் 15 பேர் அல்லது 20 பேரை நிற்பவர்களாக ஏற்றிக் கொண்டு போகலாம் என்று கருதுகிறேன். லைசென்ஸ் கொடுக்கும் போது, இதற்கு உட்பட்டுத்தான் நடத்த வேண்டும் என்று சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இந்த நிலையில் தனிப்பட்டவர்களின் பேருந்து களில் 20 பேர்களுக்கு மேல் நிற்கும் பயணிகளாக ஏற்றிக்கொண்டு போவதைக் கண்காணித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அப்படி இருக்கும்போது, அரசாங்கம் சென்னை நகரத்தில் அதிகப்படியான நிற்கும் பயணிகளை பயணிகளாக ஏற்றிச் செல்ல அனுமதித்தால், அது விதிமுறையை அரசாங்கமே மீறியதாகாதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : விதிகளை மீறாமல் இருப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்தப் பிரச்னை யின் முக்கியத்துவத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். நாள்தோறும் சென்னை நகரில் 10,37,620 பயணிகள் அரசுப் பேருந்துகளின் மூலம் பயணம் செய்கிறார்கள். சில வேளைகளில் அதிகப்படியான பயணிகளை ஏற்றிச் செல்வது என்பது தவிர்க்க முடியா ததாகிறது. எனவே, அவ்வப்போது ஷட்டில் பஸ்களை விடுவது மூலம் நெரிசலைக் குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

[2nd December 1970

திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல் இந்தப் பிரச்னை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னைதான். சென்னையைப் போலவே, மதுரை, திருநெல்வேலி போன்ற பெரிய நகரங்களிலும் இம்மாதிரியான நகரப் பேருந்துகள் ஓடுகின்றன. ஆனால் அவை எல்லாம் தனியார் துறையில் நடத்தப்படும் பேருந்துகளாகும். சென்னை நகரைப் பொறுத்த வரையில், இந்தப் பேருந்துகளில் எத்தனை பேர் வேண்டுமானாலும் ஏறிக்கொண்டு போகலாம், நின்று கொண்டு போகலாம் என்று அனுமதித்திருக்கிறபோது, இதே மாதிரி மற்ற தனியார் நடத்தும் பேருந்துகளிலும் பெரிய நகரங்களைப் பொறுத்த வரையிலாவது, அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : எத்தனை பேர் ஏற்றிக்கொண்டு போகலாம் என்று விதி விதிக்கப்படவில்லை. ஒரு பஸ்ஸில் 35 இருக்கைகளும் 25 பேர் நிற்பவர்களும் இருக்கலாம் என்று சாதாரணமாகப் பேருந்துகளை பொறுத்த வரை சொல்லப்பட்டிருக்கிறது. மற்றுமுள்ள பஸ்களைப் பொறுத்தவரை, இங்கே கணக்குக் கொடுக்கப்படவில்லை. சில வேளைகளில் தவிர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. ஜனப் பெருக்கத்தின் காரணமாக, பஸ் ஸ்டாண்டுகளில் நிற்கிற பயணிகள் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு பஸ்ஸில் ஏறும்போது, இது தவிர்க்க முடியாததாகிறது. இப்போதும் கூட விதிமுறைக்கு உட்பட்டு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் பிரச்னை எவ்வளவு முக்கியமானது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம் : அதை உணர்ந்துதான் மற்ற நகரங்களிலும் இவ்வாறு அனுமதிக்க முடியுமா என்று கேட்டேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : அப்படிப்பட்ட கோரிக்கை எதுவும் வரவில்லை. சட்டப்படி அனுமதிக்க இடம் இருந்தால், அனுமதிக்கலாம்.

திரு. எஸ். ராகவானந்தம் : நகரப் பேருந்துகளில் 25 பேருக்கு மேல் ஏற்றுவதில்லை என்று கண்டக்டர்கள்போராட்டம்நடத்தியபோது, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்போடும் ஆதரவோடும் தம் இயல்பான சிறந்த குணத்தோடும் இந்தப் பிரச்னையை அணுகிய காரணத்தால், அதைத் தள்ளிப் போட்டிருக்கிறார்கள். இருந்தாலும் நிரம்பப் பயணிகளை ஏற்றிச் செல்கிற சிரமத்தைக் கணக்கில் கொண்டு, அவர்கள் உண்மையாக நடந்துகொள்வதற்கு பாராட்டு தெரிவிக்கும் வகையில் கண்டக்டர்களுக்கு கலெக்ஷன் போனஸ் கொடுப்பதற்கும், நிரம்பப் பயணிகளை ஏற்றிச் செல்வதால் அந்தப் பேருந்துகளை ஓட்டிச் செல்லும் டிரைவர்களுக்கு அதிக சிரமம் ஏற்படுவதைக் கணக்கில் கொண்டு அவர்களுக்கு ஹார்ட்ஷிப் அலவன்ஸ் கொடுக்கவும் அரசு முன்வருமா ? அதையும் 31–12–1970-க்குள் கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

2nd December 1970]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : தொழிற் சங்கத் தலைவர் அவர்களுடைய ஒத்துழைப்பிற்கு நன்றி தெரிவித்து, பாராட்டையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நம் தொழிற் சங்கத் தலைவர் அவர்கள் போக்குவரத்துத்துறையில் உள்ள தம் நண்பர்களுக்குச் சொல்லி நல்ல முறையில் பணியாற்றி அரசாங்கத்திற்கு வருமானத்தை, லாபத்தை அதிகரிக்கச் செய்தால், அவர் சொன்ன கருத்தை நிச்சயமாகப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

*Omni Bus*

*36. Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the Government are aware of the fact that buses are plying with passengers daily from Madras to Tiruchy and from Madras to Salem, with the name board "On Contract" or "Omni Bus" ; and

(*b*) if so, the action taken thereon ?

**ஒப்பந்த ஊர்தி**

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஒப்பந்த ஊர்தி (on contract or Omni Bus) என்ற பலகையுடன் தினசரி திருச்சி—சென்னை, சென்னை—சேலம் ஆகிய நகரங்களுக்கு பிரயாணிகளை பேருந்துகள் ஏற்றிச் செல்வதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) திருச்சி—சென்னை, சேலம்—சென்னை வழித் தடங்களில் ஒப்பந்த அடிப்படையில் ஆம்னி பஸ் பேருந்துகள் விடப்படுவதை அரசு அறியும்.

(இ) இந்த ஆம்னி பஸ்கள் பேருந்துப் போக்குவரத்துத் துறை அதிகாரிகளால் சோதனையிடப்படுகிறது. பயணிகள் தாங்கள் செய்யும் பயணத்துக்காகத் தனியே கட்டணங்களைச் செலுத்துகின்றனர் என்றோ ஒப்பந்தத்தில் சேர்க்கப்படாத பயணிகளை வழிகளில் பேருந்துப் பணியாளர்கள் ஏற்றிக் கொள்கின்றனர் அல்லது இறக்கி விடுகின்றனர் என்றோ எண்பிக்கப்பட்டால் வரையறுக்கப்பட்ட நடைமுறையையொட்டி சம்பந்தப்பட்ட வண்டிகளின் உரிமங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பி. திருஞானசம்பந்தம் : தலைவர் அவர்களே, ரெகுலர் தனியார் கம்பெனிகள் பஸ் விடுவதுபோல இப்போது ஒப்பந்த ஊர்திகள் அதிகமாக ஓடுகின்றன. சமீபத்தில்கூட மானாமதுரை—சென்னை என்று ஒரு பஸ் கம்பெனி பாண்டியன் சர்வீஸ் என்ற பெயரில் பத்திரிகையில் பகிரங்கமாக விளம்பரப்படுத்துகிறார்கள். ஆகவே இவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து அதைத் தடுப்பதற்கு அரசு முன்வருமா ?